**தலைப்பு 261 –மாவட்ட செயலகம், காலி**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

காலி மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ரூபா 261,001 பெறுமதியான ஏனைய இயந்திரங்களும் உபகரணங்களும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களும் நிதிக் கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட்டு திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கப்படும் போது சில விடயங்களை பிழையாகப் பதிவு செய்ததன் காரணமாக இது இடம் பெற்றுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது. |

#### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ஏசீஏ 6 படிவத்தில் சொத்துக்களின் விற்பனைகளாக ரூபா 4,633,149 மீதி காட்டப்பட்டிருந்தது. அம் மீதி காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்களின் கீழ் சொத்துக்களின் விற்பனையாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்களின் விற்பனைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் காசுப் பாய்ச்சல்களின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ஏனைய வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது. |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 08 பிரதேச செயலகங்களின் 11 கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,407,490 கூட்டு மொத்தமான கடன் மீதிகள் காணப்பட்டதுடன் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 101,628 கடன் மீதி 06 ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னர் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓய்வு பெற்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,407,490 கடன் மீதிகள் மேலும் அறவிட வேண்டியிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 பிரதேச செயலகங்களில் வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 258,444 கூட்டு மொத்தமான கடன் மீதி காணப்பட்டதுடன் அதில் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 151,898 கடன் மீதி 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | பிணையாளர்களிடமிருந்து கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு விரைவாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 258,444 தொகை வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது எனவும் அவற்றில் ரூபா 247,944 கடன் மீதி மேலும் அறவிட வேண்டியிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாகொட பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்டு சேவையைக் கைவிட்டுச் சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 164,129 கடன் மீதி 03 ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்பட்டது. | உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறிவிட வேண்டிய கடன் மீதியை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிணையாளர் மரணமடைந்து விட்டதனால் உத்தியோகத்தரின் மனைவியின் சம்பளத்திலிருந்து செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தற்பொழுது காணப்படுகின்ற மீதி ரூபா 156,419 எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (iv) | 04 பிரதேச செயலகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு மரணமடைந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 773,108 கடன் மீதி 2019 திசெம்பர் 31 இல் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தும் அக் கடன் மீதியில் ரூபா 22,935 மீதி 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டது. | தீர்த்து வைக்கப்பட வேண்டிய கடன் மீதியை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதியில் ரூபா 498,942 மீதி அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும் ரூபா 274,166 கடன் மீதி மேலும் அறவீடு செய்ய வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

### 1.6.4 கட்டு நிதி மீதி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கரந்தெனிய பிரதேச செயலகத்தில் 2006 ஆம் ஆண்டில் இடம் பெற்ற காசோலை மோசடியின் காரணமாக கட்டுநிதிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 194,086 தொகையான தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு 13 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்திருந்தது. | தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதியை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திறைசேரியின் முற்பணக் கணக்கிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் தற்பொழுது பலபிடிய நீதவான் நீதி மன்றத்தில் இது சம்பந்தமாக வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்படாத தேர்தல் முற்பணம் ரூபா 8,936,294 ஆகும். | உரிய தரப்பினர்களிடமிருந்து விரைவாகப் பணத்தை அறவிட்டு முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது முற்பண மீதி ரூபா 2,575,234 எனவும் தேர்தல்கள் செயலகத்திலிருந்து பணம் கிடைப்பதற்கு ஏற்ற வகையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.5 ஏடுகளைப் பராமரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக வாகன இலக்கம், செசி | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறையான வாகனப் பதிவேட்டினைப் பேணுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட செயலகத்திலும் 19 பிரதேச செயலகங்களிலும் வாகனங்களைப் பட்டியற்படுத்தும் பதிவேட்டிற்குரிய தகவல்களை உள்ளடக்கும் ஒரு பதிவேடு தற்பொழுது பேணப்பட்டு |

| | | |
|---|---|---|
| இலக்கம், இனஜின் இலக்கம், குதிரை வலு, எரிபொருள் வகை, வாகன வகை, மாதிரி, கொள்வனவு செய்யப்பட்டால் கொள்வனவு செய்த திகதி, செலுத்திய பணம், செலுத்திய திகதி, பாதுகாப்புச் சான்றிதழ் என்பன தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய முறையான வாகனப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான தகவல்களை உள்ளடக்கிய முறையான பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வருகின்றது எனவும் உரிய நிதிப்பிரமாணங்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முறையான தகவல்களை உள்ளடக்கிய ஒரு பதிவேட்டினை எதிர்காலத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. |

**1.6.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல், செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதங்கள், பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளாத செயற்திட்டங்கள், காலதாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் என்பன சம்பந்தமான தகவல்கள் 10 பிரதேச செயலகங்களால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை விரைவாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 மே 29 ஆந் திகதியளவில் 14 பிரதேச செயலகங்கள் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்ககப்பட்டது. |

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| **(i)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | **ரூபா** | | |
| | தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பந்தி | கடவத்சதர பிரதேச செயலகத்தின் கல்வடுகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் பதில் கடமையாற்றும் கிராம உத்தியோகததரால் பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணக்கமற்ற வகையில் 2018 செப்தெம்பர் 11 ஆந் திகதியிலிருந்து 2019 மே 24 ஆந் திகதி வரை அக்கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமைகளை சட்டரீதியற்ற வகையில் நிறைவேற்றியமை சம்பந்தமக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவாக முடிவுறுத்தி அத்தீர்மானம் நிறைவேற்றப்படுதல் வேண்டும். | கிராம உத்தியோகத்தர் சம்பந்தமாக மேற்கொண்ட 2019 திசெம்பர் 02 ஆந் திகதிய தொடக்க புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் 2020 பெப்ரவரி 17 ஆந் திகதி தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் I ஆம் பட்டோலையின் கீழ் 25 குற்றச் சாட்டுக்களின் கீழ் குற்றச்சாட்டுக்கள் கோவை செய்யப்பட்டு குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் தற்பொழுது முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்காக தனி நபர் விசாரணைக் குழுவும் முறைப்பாடுகளை செயற்படுத்தும் உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டுள்ளனர் |

| | | | |
|---|---|---|---|
| | | | எனவும் குற்றம் சாட்டப்பட்டவரின் வேண்டுகோளின் பிரகாரம் கண்காணிப்பு உத்தியோகத்தருக்காகவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------------------- | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்கள் தொடர்பாக இடம் பெற்ற 06 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்கள் தொடர்பான அந்த வாகன விபத்துக்கள் சம்பந்தமாக மேலும் கிடைக்க வேண்டிய பணம் சம்பந்தமான நிரந்தரமான பதில் இலங்கை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கிடைத்திருக்காதனால் 06 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது எனவும் எதிர்காலத்தில் இது சம்பந்தமாக ஞாபகப்படுத்தல் மேற்கொண்டு தகவல்களை விசாரித்து கோவைகளில் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 பெறுகை வழிகாட்க் கோவையின் 3.9.1 ஆம் பிரிவு தொடர்பாக 2011 மார்ச் 09 ஆந் திகதி வழங்கப்பட்ட மேலதிக இணைப்பு. | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்த முறைமையின் பிரகாரம் வழங்கப்பட்ட வேலைகளின் மொத்த பெறுமதிகளின் மொத்தம் ரூபா 2 மில்லியனுக்கு மிகைக்காத்திருக்க வேண்டிய போதிலும் இமதுவ பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வதிவிடக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரருக்கு ஒரே தடவையில் மூன்று ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த உடன்படிக்கை செய்த பணம் ரூபா 3.9 மில்லியனாக இருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்து கொள்வதற்கு சங்கங்களைத் தெரிவு செய்யும் போது உரிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**1.6.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| காலி பத்தேகம 187 பிலகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் பேணப்பட்டு வந்த கல் குவாரிக்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த IML/B/HO/11128 ஆம் இலக்க அகழ்ந்தெடுத்தல் உத்தரவுப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. அகழ்ந்தெடுத்தல் உத்தரவுப் | இது காலி மாவட்டத்திற்குரிய விடயமாக இருப்பதனால் உரிய பிரிவினைத் தொடர்பு கொண்டு கணக்காய்வு அவதானிப்புக்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கல் குவாரி சம்பந்தமாக தேவையான | SNP/L/GSMB/2019/01 ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினா பணிப்பாளர் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட கணக்காய்வு ஐய வினா எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| பத்திரத்தினை புதுப்பிக்காது அத்திகதியிலிருந்து 2019 யூன் 09 ஆந் திகதி வரை அகழ்ந்தெடுத்தல் நடவடிக்கை இடம் பெற்றிருந்ததுடன் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வெடிக்கவைத்தல் பரிசோதனைகளின் விளைவுகளின் அடிப்படையில் 17 ஆம் இலக்க விசேட நிபந்தனையின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கல்குவரியை பேணுவதற்காக பத்தேகம பிரதேச சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வர்த்தக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் அது சம்பந்தமாகப் பொறுப்பான எத்தரப்பினரும் மேற்பார்வையினையோ அல்லது இடப் பரிசோதனையோ மேற்கொண்டிருக்கவில்லை | அங்கீகாரத்தை வழங்குகின்ற நிறுவனத்தினால் அனுமதிப்பத்திரமின்றி கல் குவாரியை பேணுவது தொடர்பாக பொறுப்புக்கு கட்டுப்படுகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டு நிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மாதாந்தம் வேண்டிக் கொள்ளப்பட்ட கட்டுநிதியின் அளவினை விட 11 சதவீதத்திற்கும் 76 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் கட்டுநிதி குறைவாகக் கிடைத்திருந்தது. | திட்டத்திற்கு இணங்கும் வகையில் கட்டுநிதி வேண்டிக் கொள்ளப்படுதல் வேண்டும். | மாவட்ட செயலகம் செலவுத் தலைப்பிற்கு மேலதிகமாக ஏனைய வரிசை அமைச்சிற்குரிய கட்டுநிதிகளையும் வேண்டிக் கொள்வதாகவும் கட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | நிதியை வழங்குவது திறைசேரியினால் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இது கட்டுப்படுத்த முடியாத விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2509 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,350,000 நிதிஏற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியில் இடம் பெற்ற செலவு ரூபா 42,480 அல்லது 3 சதவீதம் மாத்திரமாகும் | குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதானது மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதல்லாத சமயத்திலாகும். தேவைப்பாட்டினைக் கவனத்தில் கொண்டு குறைநிரப்பு நிதி ஏற்பாட்டினை வேண்டிப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தெளிவூட்டல் செயற்பாட்டிற்காக ரூபா 42,480 செலவு செய்யப்பட்டுள்ளது எனவும் உடன்படிக்கை செய்து கொள்ளப்படாத மற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை மீண்டும் தெரியப்படுத்தும் வரை தற்காலிகமாக கைவிடுவதற்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளதனால் செயற்திட்டங்களை நிறுத்தி நிதி ஏற்பாட்டினை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தாக தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக 2019 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்தை சேகரிக்குமாறு | 25 சதவீதத்தினை மிகைத்து நிதி ஏற்பாட்டினைச் சேமித்தலானது நிதி ஏற்பாடு குறை பயன்பாடாக இருப்பதுடன் அனைத்து நிதி ஏற்பாடும் சிறப்பான மட்டத்தில் பயன்படுத்தல் வேண்டும். | 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள காலப் பகுதிக்குள் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் என்ற சுற்றறிக்கையின் கீழ் நிதி ஏற்பாட்டிலிருந்து 15 சதவீதம் மற்றும் 10 சதவீதம் அளவில் மாவட்ட |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவிக்கப்பட்டிருந்தும் மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த ஒட்டுமொத்த நிதி ஏற்பாட்டில் 37 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | | செயலகத்தின் தேவைப்பாட்டினை இனங்கண்டு தெரிவு செய்யப்பட்ட சில செலவு விடயங்களிலிருந்து சேமித்தல் இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உரியதாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்திட்டங்களுக்காக காலி மாவட்ட செயலகம் மற்றும் 19 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கையில் உள்ள விலைப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 903,799,366 ஆக இருந்தது. இந்த கையில் உள்ள விலைப்பட்டியல்களுக்காக நானாவித செலவுத் தலைப்புக்களின் கீழ் ரூபா 908,957,993 நிதி ஏற்பாடு | 2019 ஆம் ஆண்டில் கையிலுள்ள விலைப் பட்டடியல்களுக்காக 2019 திசெம்பர் 31 இல் பணத்தை செலுத்தி முடிவுறுத்த வேண்டும். | உப அங்கீகரிக்கப்பட்ட கணக்கின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டிலிருந்து கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்காக 2020 ஆம் ஆண்டில் மீண்டும் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது எனவும் நிதி ஏற்பாட்டினை விடுவித்தல் இடம் பெறுவதாவது உரிய அமைச்சு அல்லது திணைக்களத்தால் எனவும் அதனை மாவட்ட தெசயலாளரினால் வலியுறுத்த முடியாத விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | 2020 சனவரி 29 ஆந் திகதி மாவட்ட செயலகத்தினால் உரிய அமைச்சு செயலாளர்களிடம் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் 2020 பெப்ரவரி வரை இந் நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மேற்கூறிய செயலகத்திற்குரிய கையிலுள்ள விலைப் பட்டியல்களின் பெறுமதிக்கு மேலதிகமாக காலி மாவட்ட செயலகத்திற்குரிய செலவுத் தலைப்பு 155-1-6-3-2104 இன் கீழ் இடம் பெறுகின்ற கேட்போர் கூட நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 30,393,751 பணமும் செலுத்த வேண்டியிருந்தது. | மீளாய்வாண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களின் பிரகாரம் சான்றுபடுத்திய வேலைகளுக்கு ஆண்டின் இறுதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | போதியளவு கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாக 155 ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 30,393,751 தொகையான கையிலுள்ள விலைப்பட்டியல்கள் காணப்பட்டது எனவும் அதற்காக கட்டுநிதி கிடைக்காமை எங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்** | | |
| ஏனைய 23 அமைச்சுக்கள் 21 திணைக்களங்கள் மற்றும் ஒரு அலுவலகம் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 6,104.304 மில்லியன் ரூபா 255.061 மில்லியன் மற்றம் ரூபா 183.108 மில்லியனாக ரூபா 6,544.473 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாட்டினை வழங்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,760.768 மில்லியன் கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடுகளில் ரூபா 1,783.705 மில்லியன் அல்லது 27 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்காக கிடைத்த நிதி ஏற்பாடு அந்த ஆண்டில் சிறப்பான மட்டத்தில் பயன்படுத்தப்படுவதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை எனவும் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் ஒரு அலுவலகத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்கு வழங்கிய நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமைக்கான காரணமாக செலவுகளை முகாமைத்துவம் செய்தல், உடன்படிக்கை செய்து கொள்ளப்படாத செயற்திட்டங்களை தற்காலிகமாக கைவிடுதல், மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளை விட விலைப்பட்டியல் பெறுமதி குறைவடைதல், சில நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படாமை ஆகிய விடயங்கள் காட்டப்பட்டிருந்தன. |

## (ஆ) ஓய்வூதியத்தினை திருத்தம் செய்தல்

| | | |
|---|---|---|
| பலப்பிடிய பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற 34 ஓய்வூதிய கோவைகளில் 16/2015 ஆம் இலக்க முரண்பாட்டுத் தகவல்கள், ஓய்வூதியபடிகளும் சம்பள ஏற்றப் பெறுமதியும், செயற்பாட்டுச் சேவைக்காலம் ஆகிய தகவல்கள் இல்லாமையின் காரணமாக 14/2019 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியங்களைத் திருத்தம் செய்ய முடியாதிருந்தது. பிரதேச செயலகங்களின் மூலம் உரிய நிறுவனங்களுக்கு இக் குறைபாடு தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தும் 2020 மே 28 ஆந் திகதி வரையும் அச் செயற்பாட்டை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. | விரைவாகத் தகவல்களைப் பெற்று ஓய்வூதிய முரண்பாடுகளைத் சரி செய்து கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இன்னும் திருத்தம் செய்ய வேண்டியுள்ள கோவைகளின் எண்ணிக்கை 34 எனவும் உரிய நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்ற உடன் இந்த ஓய்வூதிக் கோவைகளின் திருத்தம் செய்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதாகவும் இது எங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

## (இ) உத்தியோகபூர்வ வதிவிடச் செயற்திட்டங்களைப் பரீட்சித்தல்

| | | |
|---|---|---|
| (i) நியாயமான காரணங்களைக் குறிப்பிடாது முறையற்ற வகையில் கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்த இமதுவ பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வதிவிடக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் 05 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அண்ணளவாக ரூபா 2,805,154 தொகை தாமதக் கடடணமாக அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்தங்களை நீடிப்பு செய்யும் போது நியாயமான காரணம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அது முறைப்படியாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். மேலும் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடர்ச்சியாகப் பெய்த மழையின் காரணமாக உரிய இடத்திற்கு தேவையான பொருட்களை வழங்குவதற்கு முடியாதிருந்ததன் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை செய்ய முடியாமை மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தொடர்ச்சியான வேலைக்கான அங்கீகாரத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கியிருந்தமை ஆகிய விடயங்களின் காரணமாக தாமதக் கட்டணத்தை அறவிடுதல் இடம் பெற்றிருக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் கால நீடிப்பிற்காக கோருவதற்கு முறையான படிவத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | ஒரு உத்தியோகபூர்வ வதிவிடக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட காணி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான காணி இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. காணியின் உரிமையை உறுதிப்படுத்தாது இந்த உத்தியோகபூர்வ வதிவிடத்தை நிர்மாணித்தலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்வாறு ரூபா 37,640 பணம் உத்தியோகபூர்வ வதிவிடத்தினை நிர்மாணிக்கும் தொடக்க வேலைகளை நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கை செய்து கொண்ட ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்ததடன் 2020 மே மாதம் வரையும் காணியின் உரிமை திர்த்தி வைக்கப்படாததுன் காணரமாக உத்தியோகபூர்வ வதிவிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ வதிவிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியின் உரிமை தீர்த்து வைக்கப்பட்டிருந்தல் வேண்டும். | உத்தியோபூர்வ வதிவிடத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கும் போது தற்போதைய அதிபரினால் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மற்றும் பாதுகாப்பிற்கு இடையூறுகள் ஏற்படுமெனத் தெரிவித்து இந் நிர்மாணத்தை நிறுத்துமாறு தெரிவித்திருந்தானல் அறவீட்டு அறிக்கை கிடைக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**(ஈ) சமூர்த்தி வங்கிச் சங்கத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற கடன் நிகழ்ச்சித்திட்டங்கள்**

---

ஹிக்கடுவ, யக்கலமுல்ல மற்றும் போபே போத்தல ஆகிய 3 பிரதேச செயலகங்களின் கீழ் காணப்படுகின்ற 13 சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகளின் மூலம் நானாவித கடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சமுர்த்தி நலன் பெறுனர்களுக்கு ரூபா 2,728,101,685 கூட்டு மொத்தமான கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. அக் கடன் பணங்களின் ரூபா 50,759,127 காலங்கடந்த கடனாக இனங்காணப்பட்டிருந்ததுடன் ரூபா 8,663,605 தொகை ஐயக் கடனாக இனங்காணப்பட்டிருந்தது. அக் காலங்கடந்த கடனையும் ஐயக் கடனையும் அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

காலங்கடந்த கடன் மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கும் ஐயக் கடன் மீதியை குறைவடையச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மூன்று பிரசேத செயலகங்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலங்கடந்த கடன் மீதியை ரூபா 45,432,039 வரை குறைவடையச் செய்யப்பட்டுள்ளது எனவும் ஐயக் கடன் மீதியை ரூபா 8,353,345 வரை குறைவடையச் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அக்கடனை அறவீடு செய்வதற்காக மூன்று சமுர்த்தி வங்கிக் சங்கங்களின் மூலம் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்களின் மூலம் அறியப்படுத்துதல் நிருவாக சபைத் தலைவரின் மூலம் தெரியப்படுத்துதல் சட்டத்தரணியின் மூலம் கடிதங்களைச் சமர்ப்பித்தல், இணக்க சபைக்கு அனுப்பிவைத்தல், இணக்கம் செய்யப்படாத கடன் தாரர்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் என்பன இடம் பெற்றுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## (உ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| (i) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் கீழ் இமதுவ நிவ்சிடி நீர் செயற்திட்டத்திற்காக 2019 மே 23 ஆந் திகதி ரூபா 990,000 நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்தின் மூலம் இமதுவ பிரதேச செயலகத்திற்கும் வழங்கப்பட்டிருந்தது. இந் நீர் செயற்திட்டத்தின் தொடக்க புலனாய்வு மற்றும் சாத்தியவளப் பரிசோதனைக்காக 2019 மே 24 ஆந் திகதி ரூபா 48,875 செலுத்தப்பட்டிருந்தது. நீர் செயற்திட்டத்தை தேசிய சமூக நீர் வழங்கல்கள் திணைக்களத்திற்கும் இமதுவ பிரதேச செயலகத்திற்கு இடையே 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் முடிவுறுத்தி 2019 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் செயற்திட்டத்தை ஒப்படைக்க வேண்டியிருந்தது. எனினும் பிரதேச செயலகத்தினால் 2019 நவம்பர் 21 ஆந் திகதி தேசிய சமூக அடிப்படையிலான வழங்கல்கள் திணைக்களத்திற்கு ரூபா 919,500 செலுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக முடிவுறுத்தி மக்களுக்கு தேவையான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதற்காக மேலும் பின்தொடர் நடவடிக்கையை விரிவுபடுத்துதல் வேண்டும். | நிர்மாணங்கள் தாமதமடைந்ததன் காரணமாக II ஆவது ஞுபாகமூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது எனவும் அந்த நிறுவனத்திடமிருந்து இச் செயற்திட்டத்தினை விரைவாக மேற்கொள்ளாமைக்கான காரணம் விசாரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் குழாய்க் கிணறு நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் செயற்திட்டத்திற்காக பின்தொடர் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது எனவும் செயற்திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

(ii) பலிபிடிய பிரதேச செயலகத்தினால் கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது 14 சமய ஸ்தாபனங்களுக்குரிய சக்தி மின்சார வசதிகளை வழங்குவதற்கு அரசாங்க கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு ரூபா 7,000,000 ஒதுக்கீடு செய்திருந்தது. இச் செயற்திட்டம் ரூபா 5,600,000 தொகைக்கு நிபொன் சோலா பிறைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து ரூபா 2,000,000 தொகையினைச செலுத்தியிருந்தது. உடன்படிக்கையின் 6.7.8 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2019 ஒக்தோபர் 20 ஆந் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் மேற்கூறிய சூரிய சக்தி முறைமை பொருத்தப்பட்ட 14 விகாரைகள் பின்வருமாறு கட்டமைப்பிற்கு பொருத்துதல் (Grid Connection) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் 03 மாத காலம் தாமதமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க அறவிடப்பட வேண்டிய ரூபா 280,000 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

விடயத்தை தெளிவுபடுத்துவதற்குரிய கடிதத்தை விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் சூரிய சக்தி முறைமையை விரைவாக நீர் மின் சக்தி முறைமைக்கு இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கி உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுதல் வேண்டும்.

மிகவும் விரைவாக மின் இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 12 ஆம் இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் மின் இணைப்பிணை வழங்கியதன் பின்னர் செலுத்தப்படுகின்ற 15 சதவீத பணம் இதுவரை செலுத்தப்படவில்லை. எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இரண்டு தரப்பினர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வகையில் உருவாகிய காரணத்தின் அடிப்படை ஏற்பட்ட தாமதம் என்பதனால் நிர்ணயிக்கப்பட்ட தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு உச்ச அளவு முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | போபே போத்தல பிரதேச செயலகத்தின் பத்தேகம வீதி அபிவிருத்திச செயற்திட்டத்திற்காக காணியை சுவீகரிப்பது தொடர்பாக செயற்திட்டத்தின் கீழ் கஹதுவவத்தையிலிருந்து போத்தல வரையான வீதிக்காக காணியை சுவீகரித்துக் கொள்வதற்காக 578 காணித்துண்டுகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய காணியின் அளவு 5.4931 ஹெக்டெயர்களாகும். காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38(அ) ஆம் இலக்க உப கட்டளை வழங்கப்படாது சாதாரண இழப்பீட்டினை வழங்கும் முறைமையை பின்பற்றக்கூடிய இயலுமை காணப்பட்டிருந்தும் அவசர சந்தர்ப்பமாகக் கருதி காணிச்சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (அ) உப கட்டளையின் கீழ் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததனால் இழப்பீட்டினைச் செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் 2020 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணி உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி அண்ணளவாக ரூபா 217,162,882 ஆகும். | அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வட்டியைக் கணித்து இது சம்பந்தமாக உரிய அமைச்சிடமிருந்து விடயத்தை விசாரித்து கணக்காய்விற்குப் பதில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | இதன் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஒவ்வொரு காணிக்காக வழங்கப்படுகின்ற மதிப்பீட்டுப் பணம் மாத்திரம் என்னால் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சு செயலாளரினால் 38(அ) ஆம் இலக்க உப பணிப்புரையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | போபே பிரதேச செயலகத்தின் வக்வெல்லெயிலிருந்து நீர்த்தேக்கம் வரை நீர்ப்பம்பி குழாய் வழிகளை அமைப்பதற்காக தேவையான | இழப்பீட்டினைச் செலுத்துதல் தாமதமடைந்தமைக்கு நியாயமான காரணத்தை விசாரித்து | 11 காணித் துண்டுகளுக்காகவும் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டுத் |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளைச் சுவீகரிக்கும் போது 11 உரிமையாளர்களுக்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தது. இழப்பீட்டினைச் செலுத்துவதற்கான உரிமைப் பரிசோதனை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய இழப்பீட்டினைச் செலுத்தும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (அ) உப பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதனால் உரிய இழப்பீட்டுப் பணத்துடன் இழப்பீட்டு காசோலையை எழுதும் சந்தர்ப்பம் வரை உரிய வட்டிப் பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங் 2012 நவம்பர் 23 ஆந் திகதியிலிருந்து 07 ஆண்டுகளுக்குரிய வட்டிப் பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. | குறைபாடுகளைப் பூரணப்படுத்தி இழப்பீட்டினைச் செலுத்தும் நடவடிக்கையை முடிவுறுத்த வேண்டும். | திணைக்களத்திற்கு 2020 மார்ச் 13 ஆம் திகதியளவில் சமர்ப்பிப்பதாகவும் மதிப்பீடு கிடைத்த உடன் இழப்பீட்டுப் பணத்தை நீதிமன்றத்தினால் வைப்புச் செய்து கோவையின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. |
| (v) | ஹிக்கடுவ பிரதேச செயலகத்தின் தொடந்துவ பொது வர்த்தக சந்தையை நிர்மாணிப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் படுவத கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 0.1709 ஹெக்டெயர் அளவான மாதமுல்ல கும்புறு ஓவிட காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கை 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் | உரிய தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தை பெற்று காணியைச் சுவீகரிக்கும் நோக்கத்தை விரைவாக நடைமுறைப்படுத்துதல் வேண்டும். | காணியை சுவீகரிப்பது தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட முழுப் பணத்தையும் வேண்டிக் கொண்ட அமைச்சினால் பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்படாதனால் கோவையின் மிகுதி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. என தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | காணியைச் சுவீகரிப்பதற்கு ரூபா 20 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5 இலட்சம் மாத்திரம் பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மிகுதிப் பணம் செலுத்தப்படாததன் அடிப்படையில் இழப்பீட்டினைச் செலுத்துதல் உள்ளடங்கலாக காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கையானது இடை நடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (vi) | ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் மோதர படுவத கிராம உத்தியோகத்தர் பிரிவில் 0.243 ஹெக்டெயர் அளவான பிமிபுருதெனிய காணி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் மூலம் கடற்றொழிலாளர் வீடமைப்புத் திட்டத்தினை அமுல்ப்படுத்தும் நோக்கத்துடன் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38(ஆ) பிரிவிலுள்ள உப பணிப்புரையின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டின் போது அரசுடமையாக்கப்பட்டு தற்பொழுது 20 ஆண்டுகளை அன்மித்த காலம் கடந்திருந்தும் மேற்கூறிய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | காணியை சுவீகரிக்கும் நோக்கமாகிய வீடமைப்புத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேற்கூறப்பட்ட காணி சுவீகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாததனால் கிராமத்தை விரிவுபடுத்துவதன் கீழ் காணிகள் இல்லாத மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான சிபார்சு 2019 செப்தெம்பர் 09 ஆந் திகதி காணி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய சுவீகரிக்கும் நோக்கத்த திருத்தம் செய்வது சம்பந்தமான சிபார்சு 2020 சனவரி 21 ஆந் திகதி கடிதத்தின் மூலம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் இது வரை அமைச்சினால் சுவீகரிக்கும் நோக்கம் திருத்தப்பட்டு அனுப்பி |

| | | | |
|---|---|---|---|
| | | | வைக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (vii) | ஹிக்கடுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குமார வித்தியாலயம் அமைந்துள்ள காணியை சுற்றுலா மேம்பாட்டு செயற்பாடுகளுக்காக தெற்கு சுற்றுலா பணியகத்திற்கு 30 ஆண்டுகளுக்கு நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்கு 2016 யூலை 07 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தெற்கு சுற்றுலா பணியகத்தால் இக் காணி 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகளுக்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு அங்கீகாரமின்றி உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையானது 2017 நவம்பர் 21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. ஒரு தனியார் நிறுவனத்திற்கு காணியை உப குத்தகைக்கு வழங்குவதால் மேற்கூறிய சுற்றுலா மேம்பாட்டு நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. | காணியை குத்தகைக்கு வழங்கும் நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறையான அங்கீகாரம் இல்லாது தெற்கு சுற்றுலா பணியகம் ஒரு வெளிவாரி நிறுவனத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் இடம் பெற்ற ஒரு கொடுக்கல் வாங்கல்லாக இருப்பதனால் அவர்களை அகற்றுவது சிக்கலான நிலைமையாக இருப்பதனால் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்குமாறு தென் மாகாண காணிகள் ஆணையாளர் திணைக்களத்திடம் இரண்டாவது சந்தர்ப்பத்திலும் 2020 மார்ச் 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வேண்டிக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (viii) | தெற்கு சுற்றுலா பணியகத்தால் காணியின் உரிமையைப் ஒப்படைப்பதற்காக 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி ஹிக்கடுவ பிரதேச செயலகத்திற்கு தொடக்க குத்தகை தவணைப் பணமாக | நிலுவைக் குத்தகைப் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கும் உப குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை | காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019 யூலை 24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இன்று வரை காணப்படுகின்ற அனைத்து நிலுவை குத்தகைப் |

| | | |
|---|---|---|
| ரூபா 320,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தும் உப குத்தகைதாரரினால் தெற்கு சுற்றுலா பணியகத்திற்கு ரூபா 350,000 வீதம் 2018 திசெம்பர் 31 ஆந் திதகி 10 மாதங்களுக்காக ரூபா 3,500,000 தொகையான குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. பணியகத்தினால் ஹிக்கடுவ பிரதேச செயலகத்திற்கு குத்தகை தவணைப் பணத்தைச் செலுத்தாது காணியை மூன்றாம் தரப்பினருக்கு உப குத்தகைக்கு வழங்கி வருமானத்தை உழைத்தல் அரசாங்கத்தின் காணிகள் துஸ்பிரயோகம் செய்வதாக அவதானிக்கப்பட்டது. | எடுத்து கணக்காய்விற்கும் அறிக்கையிடுதல் வேண்டும். | பணத்தையும் அறவீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க உரிய குத்தகைப் பணத்தைச் செலுத்துமாறு தெற்கு சுற்றுலாப் பணியகத்திற்கு 2019 யூலை 26 – 2019 ஆகஸ்ட் 28 – 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**(ஊ) கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சி**

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையில் காணப்படுகின்ற எதிர்பாராத ஏழ்மையை 2030 ஆம் ஆண்டளவில் முழுமையாக இல்லாமல் செய்வதற்காக வறுமை ஒழிப்பினைப் போல உற்பத்தியினை அதிகரித்து தொழில் வாய்ப்பினை அதிகரித்தல் என்ற நோக்கத்திற்காக 4 பிரதேச செயலகங்களுக்கு மாத்திரம் ரூபா 35,636,139 தொகையான் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 21,617,131 | கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியினை ஆரம்பிக்கும் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்று கிடைக்கப் பெற்றுள்ள நிதி ஏற்பாட்டினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் குறிக்கோளில் நிதி ஏற்பாட்டினை மீளத் திருப்பி அனுப்புதல் இடம் பெற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இன்று வரை முறையான ஆலோசனை இல்லாததனால் வைப்புச் செய்யப்பட்ட பணம் வங்கி கணக்குகளில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்காலத்தில் அமுல்ப்படுத்த வேண்டிய முறைமை சம்பந்தமாக முறையான ஆலோசனை வழங்கப்படாமையும் அடிக்கடி சுற்றறிக்கைகளை திருத்தம் செய்வது காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் தாமதமாக இடம்பெற்றிருந்தது. | | |
| (ii) | கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டட பலிபிடிய பிரதேச செயலகத்தின் 03 கிராம சக்தி மக்கள் சங்கங்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,552,813 தொகையை வங்கியில் வைப்புச் செய்திருந்ததுடன் இந் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டதன் காரணமாக அரசாங்கத்தின் பணம் முறையாக செயற்திறனான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது விளைவற்று நிறுத்தி வைக்கப்பபட்டிருந்தது. | சங்கங்களின் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணம் உரிய குறிக்கோளுக்காக செயற்திறனாகப் பயன்படுத்தி கணக்காய்விற்கு அறிக்கையிடுதல் வேண்டும் | மக்கள் சக்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இரத்துச் செய்ததன் பின்னர் இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக எதுவித ஆலோசனையும் சனாதிபதி செயலகத்தின் மூலம் கிடைக்கவில்லை எனவும் வைப்புச் செய்யப்பட்ட பணம் வங்கி கணக்குகளில் காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

**(எ) வெள்ளம் மண்சரிவு மற்றும் மண்சரிவு அதிக ஆபத்தின் காரணமாக தமது வதிவிடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடும்பங்களை மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டம்**

---

| | | |
|---|---|---|
| இடர் முகாமைத்துவ அமைச்சினால் வெள்ளம் மண்சரிவு மற்றும் மண்சரிவு அதிக ஆபத்தின் காரணமாக தமது வதிவிடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடும்பங்களை மீள் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யக்கலமுல்ல பிரதேச செயலகத்திற்கு 2017 ஒக்தோபர் 26 ஆந் திகதி ரூபா 119,200,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேசிய கட்டிடங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் தலைமையில் 28 நலன் பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு நலன்பெறுனருக்கு உச்ச அளவாக ரூபா 1,200,000 பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br>நலன்பெறுநர்களுக்குச் செலுத்தவேண்டிய IV ஆவது தவணைப் பணத்தில் ரூபா 25,000 பணத்தை பொருத்தத் தன்மை சான்றிதழைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் செலுத்த வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் 13 நலன்பெறுனர்களினால் அந்த பொருத்த தன்மை சான்றிதழ் பெற்றுக்கொள்ளாது ரூபா 325,000 கூட்டுபொருத்தமான பணம் விடுவிக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புக்கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | தகமையுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து சான்றிதழைப் பெற்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளவாறு தவணைப் பணத்தை விடுவித்தல் வேண்டும். | கொரோனா வைரஸ் நல்ல நிலைக்கு மாறியதன் பின்னர் அலுவலகத்திலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மூலம் சான்றிதழைப் பெற்று அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பொது வைப்புக் கணக்குகள் தொடர்பாக 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 81,444,468 தொகை மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 180,031,698 மீதிகள் அவதானிக்கப்படடது. அவற்றில் ஒரு பொது வைப்புக் கணக்கில் ரூபா 187,511,444 தொகையான வைப்புப் பணம் மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு காபட் இடும் செயற்திட்டங்களின் பிடித்து வைத்தல் பணமாக இருந்தது. அம் மீதிகள் சம்பந்தமாக பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். திருப்திகரமான முறையில் வீதிகளுக்கு காபட் இடும் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள தொழில் முயற்சியாளர்களின் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கும் அவ்வாறு இல்லாத நிறுத்திவைத்தல் பணம் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட செயலகத்திற்குரிய வீதிகளை காபட் இடும் செயற்திட்டம் தொடர்பான நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்காக வேலைகள் பூர்த்தி செய்யப்படாத வீதிகளில் வேலைகளை முடிவுறுத்தி மேற்பார்வை செய்யும் நிறுவனமான தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்க வேண்டுமெனவும் 2015 ஆம் ஆண்டிலிருந்து நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செய்வதற்குத் தேவையான அங்கீகாரம் மற்றும் நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணத்தால் பணத்தை விடுவிப்பதற்கு முடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 10 பிரதேச செயலகங்களினால் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் 316 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கிரயம் ரூபா 141 மில்லியனாக இருந்தது. | ஆண்டின் போது பயன்படுத்தக்கூடிய நிதி ஏற்பாட்டின் அளவினைத் தீர்மானித்து முன்னுரிமை வழங்க வேண்டிய அபிவிருத்திச் செயற்திட்டங்களை இனங்கண்டு அவற்றை செயற்திறனாக நிறைவேற்றி நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்ட செயற்திட்டங்களை மீண்டும் அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேர்தல் ஆணைக்குழுவின் மற்றும் நிதி அமைச்சின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படாத செயற்திட்டங்களை தற்காலிகமாக இடை நிறுத்துதல், செயற்திட்டங்களுக்காக எந்த ஒப்பந்த சங்கமும் முன்வராமை, உடன்படிக்கை செய்து கொண்ட சங்கம் செயற்திட்டத்தை கைவிடுதல் ஆகிய காரணங்களினால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| ஹிக்கடுவ, கோனாபீனுவல, பத்தேகம ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 11 மில்லியன் கூட்டு மொத்தமான 16 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 60 நாட்களுக்கும் | செயற்திட்ட காலத்தை நீடித்தலானது, எனது முறையான காரணங்களின் அடிப்படையில் நியாயமான காலமாக இருக்க | அதிக மழையின் காரணமாக தாமதமடைந்த சில செயற்திட்டங்களிலிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளன எனவும் |

| | | |
|---|---|---|
| 90 நாட்களுக்கும் இடையிலான காலம் தாமதமடைந்திருந்தன. | வேண்டியதுடன் அவ்வாறு அக் காலத்தை நீடித்தலானது முறைப்படியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கால நீடிப்புச் செய்யப்படாத செயற்திட்டங்களிலிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும | சில செயற்திட்டங்களின் வேண்டுகோளின் பிரகாரம் காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் தாமதத்தின் காரணமாக செயற்திட்டங்களின் தரம் சம்பந்தமாக எதுவித சிக்கலும் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்காத செயற்திட்டங்கள் தொடர்ச்சியான வேலையாக முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

**3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்ற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் காலி மாவட்டத்தில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தொழில் வாய்ப்பு சதவீதம் முறையே 95, 94.9 மற்றும் 95.6 சதவீதமாகக் காட்டப்பட்டிருந்தது. காலி மாவட்டத்தின் சமுர்த்தி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாவட்டத்தின் சமுர்த்தி | செயலாற்றல் அறிக்கையானது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதால் தரவு ரீதியான தகவல்களின் சரியான தன்மை சம்பந்தமாக உறுதிப்படுத்துதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான மாவட்ட செயலாற்றல் அறிக்கைக்கு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலங்கை தொழில் வலு மீளாய்வின் பிரகாரம் காலி மாவட்டத்தில் உரிய தரவு ரீதியான தகவல்கள் சரியாக வழங்கப்பட்டுள்ளது எனவும் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையின் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | நலனாளிகளின் எண்ணிக்கை 227,610 ஆக இருந்தது. மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 1,124,019 ஆக இருந்ததுடன் சனத்தொகையின் 20 சதவீதமான அளவானது சமுர்த்தி நலனாளிகளானமையால் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தொழிலில் ஈடுபடும் சதவீதம் 95 சதவீதம் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. | | எண்ணிக்கையைக் கணக்கிடுகையில் 36 சதவீதத்திற்கு அண்மித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கோல் டீ கோல் மண்டபத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 3,425,529 ஆக இருந்தும் ஆண்டிற்கான செலவுகள் காட்டப்பட்டிருக்கவில்லை | வருமானத்தையும் செலவுகளையும் ஒப்பிடக்கூடிய வகையில் தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான கோல் டீ கோல் மண்டபத்தின் செலவுகள் ரூபா 2,474,334 எனவும் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உறுதியாகக் குறிப்பிட்டு அரசாங்க நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகங்களின் மூலம் 2017 ஆம் ஆண்டு சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 200,323,098 ஆக இருந்தது. எனினும், 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 48,600,000 ஆக இருந்ததுடன் | 4 வருமானத் தலைப்புக்களுக்காக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காமைக்கு நியாயமான காரணம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பின் மூலம் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். | 20.03.02.03, 20.03.02.13 20.03.02.14 மற்றும் 20.04.01.00 ஆகிய நான்கு வருமானத்தலைப்புக்களுக்காக வருமானத்தை மதிப்பீடு செய்வதற்கு அறிவுறுத்தல் கிடைத்திருக்காததனால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் சேகரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 246,672,561 ஆக இருந்தது. அதனை மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 508 சதவீத அதிகரிப்பு என்பது அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு வருமானத்தை குறைத்து மதிப்பீடு செய்வதற்கு நியாயமான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வருமானத்திற்கு 07 வருமானத்தலைப்புக்களிலும் வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளதன் காரணமாக சேகரிக்கப்பட்ட வருமானம் இவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை விட அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | பிரதேச செயலகங்களின் மூலம் 06 வருமானத் தலைப்புக்களின் கீழ் 2017 ஆம் ஆண்டில் மற்றும் 2018 ஆம் ஆண்டில் முறையே ரூபா 161,421,548 மற்றும் ரூபா 186,970,456 கூட்டுமொத்தமான தொகைகள் சேகரிக்கப்பட்டிருந்தும் அவ்விடயங்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 4 வருமானத் தலைப்புகளுக்காக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காமைக்கு நிலையான காரணம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பின் மூலம் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். | நான்கு வருமானத் தலைப்புக்களுக்காக வருமானங்களை மதிப்பீடு செய்வதற்கு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்காததன் காரணமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கு இந்த மதிப்பீடு செய்யப்படாத வருமானத்தலைப்புகளிலும் வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. |
| (உ) | 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் காலி படகன்வில மற்றும் தவலம சுற்றுலா விடுதிகளுக்காக 2018 ஆம் ஆண்டில் முறையே ரூபா 28,324,235 மற்றும் ரூபா 128,611,862 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்தன. அவற்றிற்கு | செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயலாற்றல் அறிக்கையின் குறிப்பிடப்பட்ட படகன்வில மற்றும் தவலம சுற்றுலா விடுதிகளின் 2018 ஆம் ஆண்டிற்கான திருத்தம் செய்தல் செலவுகள் தாமதக் தாமதத் தவறினால் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

மத்தியில் படன்வில சுற்றுலா விடுதியை திருத்தம் செய்யும் செலவு ரூபா 27,772,419 மற்றும் தவலம சுற்றுலா விடுதியை திருத்தம் செய்யும் செலவு ரூபா 128,105,907 ஆக இருந்தன. அந்த திருத்தம் செய்தல் செலவுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றுலா விடுதிகள் இரண்டினதும் 2018 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 264,900 மாத்திரமாக இருந்தது.

## 3.4 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | | | |
| (i) | படகன்வில மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் பாதுகாப்பினை முன்னிட்டு கேபியன் அணையை நிர்மாணிக்கும் வேலைகள் இரண்டு பகுதிகளாகப் பிரித்து பெறுகைச் செயற்பாடுகள் இரண்டாக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் 15 ஆந் திகதி மேற்கூறிய நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட்டு மாவட்ட செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப் பெறுகைச் செயற்பாடுகள் உயர் தகமைகளுடனான அதிக | பதிலில் குறிப்பிட்டப்பட்டவாறு இது அதிக கவனத்துடன் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு செயற்திட்டம் என்பதனால் கேபியன் அணையை நிர்மாணிப்பதற்கு முன்னர் நிலையப் பரிசோதனை மேற்கொண்டு இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் தேவையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த | இது அதிக கவனத்துடன் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்திட்டம் என்பதனாலும் தனியான செயற்திட்டமாக நிறைவேற்றுவதற்கு அதிக காலம் எடுப்பதனாலும் இரண்டு செயற் திட்டங்களாக விலை ஒப்பீட்டு முறையில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு செயற்திட்டங்களினதும் மதிப்பீடு செய்யப்பட்ட |

அனுபவமுள்ள ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்காமை, உரிய நியமங்களுடைய மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படாமை மற்றும் பயிற்சி இல்லாத வேலையாட்களைப் பயன்படுத்தியிருந்தமை ஆகிய காரணங்களால் 2019 ஒக்தோபர் 24 மற்றும் 25 ஆந் திகதிகளில் கேபியன் அணை பாதிப்புக்கு உள்ளாகியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 7,690,295 நட்டம் ஏற்பட்டிருந்தது.

வேண்டியிருந்தது. மேலும் உரிய நியமத்துடனான மூலப் பொருட்களைப் பயன்படுத்தாமை சம்பந்தமாகவும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பணத்தை கூட்டுச் சேர்க்கையில் ரூபா 20 மில்லியனை மிகைக்கவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தக்காரர்களும் அதிகளவு அனுபவத்தைக் கொண்டுள்ளார்கள் எனவும் அவ்வாறான ஒப்பந்தக்காரர்களுக்கு பயிற்சி பெற்ற பல வேலையாட்கள் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் பயன்படுத்தப்பட்ட மூலம் பொருட்களின் தரம் சம்பந்தமாக கணக்காய்வு சுட்டிக்காட்டியதானது பரப்பட்ட கருங்கற்களின் அளவு சிறிய அளவில் அதிகரித்துள்ளது எனவும் நடைமுறையில் நிர்மாணிக்கும் போது ஈடுபடுத்தப்பட்ட கற்களின் அளவு சிறிய அளவில் மாற்றமடையலாம் எனவும் இந் நிர்மாணம் Gravity Retaining wall ஒன்றாக இருப்பதனால் கற்களின் அளவு சிறிய அளவில் அதிகரித்தல் அதன் நிலைத்திருத்தல் தன்மைக்கு தாக்கம் ஏற்படுத்துவதில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | | | கேபியன் அணையின் புரண்டு சென்ற 13 மீற்றர்கள் அளவான நீளப் பகுதியின் பெறுமதி ரூபா 9 இலட்சத்திற்கு அண்மித்த பணம் எனவும் அந்த பாதிப்புக்கு உள்ளாகிய பகுதியை மீண்டும் நல்ல நிலைக்கு மாற்றித் தருவதாக ஒப்பந்தக்காரர் எழுத்து மூலம் தெரிவித்துள்ளார் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 7,690,295 பெறுமதிக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்கூறிய கேபியன் அணையை நிர்மாணித்ததன் பின்னர் பாதிப்படைந்தமை சம்பந்தமாக அறிக்கையினை தயாரித்து பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான பேணிப் பாதுகாக்கும் செயற்திட்டத்தின் மூலம் மழையினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் அக்குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்காதுடன் அரசாங்கத்தின் நிதிக்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சேதமடைந்த கேபியன் அணை சம்பந்தமாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு (NBRO) மூலம் ஒரு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும் அவ்வறிக்கையின் பிரகாரம் கேபியன் அணையின் ஒரு பகுதி 2019 ஒக்தோபர் மாதம் 24 மற்றும் 25 ஆந் திகதிகளில் ஏற்பட்ட அதிக மழையின் காரணமாக உடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க கேபியன் அணையை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அங்கீகாரத்தினை வழங்கும் கடிதத்தில் (Letter of Acceptance) காணப்பட்ட 6 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நிர்மாண வேலைகள் தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் 12 மாதங்களை உள்ளடக்கும் வகையில் மொத்த ஒப்பந்த பெறுமதிக்கு அனைத்து ஆபத்துக் காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இடம் பெற்ற நட்டத்தை மேற்கூறிய காப்புறுதித் திட்டத்திலிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கேபியன் அணையை ஒப்பந்தக்காரரின் மூலம் மீண்டும் தயார்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதித் திட்டத்தின் மூலம் நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் காப்புறுதித் திட்டம் கிடைத்ததன் பின்னர் அது பற்றி எழுத்து மூல சான்றுகளுடன் கணக்காய்விற்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். | கேபியன் அணையை நிர்மாணிப்பது சம்பந்தமாக காப்புறுதித் திட்டத்தின் மூலம் நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் 2020 ஏப்ரல் 11 ஆந் திகதி கேபியன் அணையை நல்ல நிலைக்கு மாற்றுவதற்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | மண்ணை வலுப்படுத்துவதற்காக டெரா மெஸ் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அது கட்டமைக்கப்பட்ட நிர்மாண வேலைகளுக்கான தொழில்நுட்ப முறைகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான டெரா பெஸ் ஈடுபடுத்தப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதனால் இதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,018,604 பணம் மிகைக் கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது. | மதிப்பீடுகளில் காட்டப்பட்டவாறு போதியளவான Terra – Mesh பயன்படுத்தப்பட்டது என்பதற்கு பௌதீக சான்றுகளுடன் கணக்காய்விற்குச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். | 2019 திசெம்பர் 03 ஆந் திகதி கணக்காய்வு உத்தியோகத்தர்கள் கேபியன் அணையைப் பரீட்சித்தாகவும் Terra – Mesh மேலிருந்து முதலாம் மட்டத்திற்கு ஈடுபடுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என தொழில்நுட்ப உத்தியோக்கத்தர்களால் காட்டப்பட்டுள்ளது. எனவும் தேவையாயின் மிகுதியான மட்டங்களில் Terra – mesh ஈடுபடுத்தப்பட்டுள்ளமையைக் காட்ட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. |

(ஆ)

| | | | |
|---|---|---|---|
| (i) | வெள்ளத்தினாலும் மண்சரிவுகளினாலும் பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களை புனரமைத்தல் மற்றும் மீள்நிர்மாண நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் சம்பந்தமாக சுற்றறிக்கையின் மூலம் மாவட்ட செயலாளருக்கு கேள்வி கோரப்படாது ரூபா 50 மில்லியன் வரை ஒப்பந்த வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் அவசர பெறுகைச் செயற்பாடுகள் எனக் கருதி யக்கலமுல்ல பிரதேச செயலகம் செயற்பட்ட பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றி புதிய மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பழைய கட்டிடம் வெள்ளத்திற்கு உள்ளாகுவதில்லை. எனவும் அவசர செயற்பாடக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் பிரிவிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணான நடவடிக்கையாக அவதானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அலுவலகத்தில் போதியளவு இடவசதிகள் இல்லாமையின் காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நடைமுறைக்கு அதிகளவு தடை ஏற்பட்டுள்ளது எனவும் அலுவலககத்தின் ஒற்றை மாடி மிகவும் உடைந்த நிலையில் காணப்படுவதன் காரணமாக பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்கும் அந்த இடத்தில் அதற்குப் பதிலாக ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய MNPEA/04/2017 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க இந்த ஒப்பந்தமானது நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு திறந்த கேள்விகள் கோரப்படாது வழங்கும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. |
| (ii) | யக்கலமுல்ல பிரதேச செயலகத்தின் பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்கு 2018 சனவரி 18 ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அதற்கு முன்னர் அல்லது 2017 திசெம்பர் 30 ஆந் திகதி மயூரா கன்ஸ்ட்ரகஷன் நிறுவனத்துடன் ரூபா 37,721,266 தொகைக்கு உடன்படிக்கை செய்தமை மற்றும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 7,544,253 தொகையான காசோலை வழங்கியதன் மூலம் இந்த ஒப்பந்தக்காரக்கு திட்டமிட்டு ஒப்பந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கும் கடிதத்தின் உண்மையான பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்கான அங்கீகாரம் வழங்கியுள்ள கடிதம் 2017 திசெம்பர் 28 ஆந் திகதி உள்நாட்டு அலுவலக்கள் அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க ஒப்பந்தத்தை வழங்குதல் உடன்படிக்கை செய்து கொள்ளல் முற்பணம் வழங்குதல் கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் என்பன அங்கீகாரப்பட்டதன் பின்னர் இடம் பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) வாகனப் பயன்பாடு | | |
| 2019 ஆம் ஆண்டில் சனவரியிலிருந்து திசெம்பர் 02 ஆந் திகதி வரை 10 வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதுடன் ரூபா 328,203 கூட்டு மொத்தமான பழுதுபாாத்தல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ரூபா 254,420 காப்புறுதி இழப்பீடு கிடைத்திருந்தது. ஒரு வாகனம் 2019 நவம்பர் 14 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியமை சம்பந்தமான பழுதுபார்த்தல் செலவுகள் அல்லது காப்புறுதி இழப்பீடு கிடைத்தமை வெளியிடப்படாததுடன் மற்றுமொரு வாகனத்தின் பழுதுபார்த்தல் செலவு ரூபா 25,800 ஆக இருந்தும் அதற்கான காப்புறுதி இழப்பீடு கிடைத்ததா என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் சம்பந்தமாகவும் கிடைத்த காப்புறுதி இழப்பீடுகள் சம்பந்தமாகவும் சம்பவக் குறிப்பு புத்தகத்தில் உள்ளடக்கி அது சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | PD 6051 ஆம் இலக்க வாகனம் 2019 ஆகஸ்ட் 13 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியுள்ளது எனவும் இதன் பழுதுபார்த்தல் செலவு ரூபா 25,800 எனவும் வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 25,800 பணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் கோவையின் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. ஹபராதுவ பிரதேச செயலத்திற்குச் சொந்தமான PC 5063 ஆம் இலக்க வாகனம் 2019 நவம்பர் 14 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியுள்ளது எனவும் அதன் பழுதுபார்த்தல் செலவு ரூபா 18,300 எனவும் வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 17,050 பணம் செலுத்தப்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன் வித்தியாசம் ரூபா 1,250 எனத் தெரிவிக்கப்பட்டது. |

(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| போபே போத்தல பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள ஸ்மாட் சிறீ லங்காவின் பிராந்திய அலகினை அமைத்து slieg.app கணனி மென் பொருளினூடாக தொழில் வாய்ப்பினை எதிர்பார்க்கின்றவர்களைப் பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு அது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். இந் நடவடிக்கைகயை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகத்தின் மூலம் இரண்டு கணனிகள் 2019 நவம்பர் 25 ஆந திகதி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. விரிவான நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்தை ஏனைய நிறுவனத்திற்கு வழங்குமாறு வாய்மொழி மூலம் தெரிவித்து இடை நடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வழங்கப்பட்ட இரண்டு கணனிகளும் விளைவற்று களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டதுடன் பெறுமதி கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்மாட் சிறீ லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திறனின்மை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கணனி இயந்திரத்தை ஏனைய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக் கணனிகள் சனாதிபதி செயலகத்தினால் கொள்வனவு செய்தல் நடவடிக்கை இடம் பெற்றிருந்தனால் பெறுமதி சம்பந்தமாக இந்த அலுவலகத்திற்கு தகவல்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. விரிவான நோக்கத்தில் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அக் கணனி இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான இணையதளங்கள் இன்று வரை கிடைத்திருக்காததனால் இச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட கணனிகளில் உரிய மென்பொருட்கள் காணப்படுவதனால் நிர்ணயிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் கிடைக்கும் வரை பாதுகாப்பாக வைத்திருக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. |

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 1971 ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டு வரை பிணை வைப்புச் செய்த 35 உத்தியோகத்தர்களுக்குரிய வங்கி பாஸ் புத்தகங்கள் மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. இப் பிணை வைப்புக்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு 2020 மே மாதம் வரையும் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புபட்ட 35 பாஸ் புத்தகங்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் அதன் நிகழ்கால செயல் முன்னேற்றத்தினை கணக்காய்விற்கு தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1971 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை பிணை வைப்புச் செய்த உத்தியோகத்தர்களின் வங்கி பாஸ் புத்தகங்கள் இந்த அலுவலகத்தில் உள்ளதுடன் அப் பாஸ் புத்தகங்களுக்கு மத்தியில் தகவல்களை வழங்கக் கூடிய அனைத்து பாஸ் புத்தகங்களையும் உரிய அலுவலகங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தகவல்களை தேடிக் கண்டு பிடிக்க முடியாத 35 பாஸட புத்தகங்கள் இன்று வரை காணப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது ஹிக்கடுவ பிரதேச செயலகத்தின் 02 உப அலுவலகங்கள் ரத்கம மற்றும் மாதம்பகமவில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 யூன் 30 ஆந் திகதி வரை அதற்காக அலுவலக வாடகை மின்சார கட்டணம் நீர்க்கட்டணம் தொலைபேசி கட்டணம், சுத்திகரிப்புச் செலவுகள், பாதுகாப்புச் சேவைக்க கட்டணம் அலுவலகத்தை | பிரதேச செயலக உப அலுவலகங்களின் மூலம் இன்று வரை போதியளவு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பரீட்சித்து | காலி மாவட்ட செயலாளரின் வேண்டுகோளின் பிரகாரம் உப அலுவலகங்களில் பதவியினர்களை இணைத்துக்கொள்ளல் அணைத்தும் ஹிக்கடுவை பிரதேச செயலகத்தின் பதவியயினனர்களின் கீழேயே இடம் பெறுவதனால் சம்பளங்களைச் |

| | | |
|---|---|---|
| திறத்தல் செலவுகள், கட்டிடத்திற்குள் அறைகளாகப் பிரித்தல் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகளாக ரூபா 8,326,225 கூட்டு மொத்தமான செலவுகள் இடம் பெற்றிருந்தன கர்ப்பிணிப் பெண்களுக்காக, ஊட்டச்சத்து, முத்திரை வழங்குதல் மற்றும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாடு மாத்திரமே மேற்கூறிய பிரதேச செயலகங்களில் இடம் பெற்றிருந்ததுடன் 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக ரூபா 8,326,225 கூட்டு மொத்தமான செலவுகள் மேற்கொண்டு அச் செயற்பாடுகளை மாத்திரம் நிறைவேற்றுதலானது சிக்கனமற்ற மற்றும் விளைவற்ற செயற்பாடாக அவதானிக்கப்பட்டது. | கட்டிடங்களுக்காகச் செலுத்தப்படுகின்ற வாடகைக்கு நேரொத்த வகையில் பொது மக்களுக்கான சேவையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலுத்துவதற்காக மேலதிக நிதி ஏற்பாடு செலவு செய்யப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 97 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய இப்பிரதேச செயலகப் பிரிவுகளை 3 ஆக மாற்றுவதற்காக இன்று வரை 2147/2018 ஆம் இலக்க 2019.10.29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதனால் பதவியணியினர்களை அங்கீகாரித்ததன் பின்னர் புதிய பிரதேச செயலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்படும் வரை இக் கட்டிடங்களைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு தமது சேவைகளை வசதியாக நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் சுனாமி வீடுகளின் உரிமையாளர்களுக்கு 2004 திசெம்பர் 26 இலிருந்து கணக்காய்வுத் திகதியான 2019 யூலை 24 ஆந் திகதி வரையும் வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த 64 சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | கணக்காய்வுத் திகதி வரை உரிமைப் பத்திரம் வழங்கப்படாதிருந்த 64 சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2004 திசெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து கணக்காய்வுத் திகதி வரை இப் பிரதேச செயலகத்தின் உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாத 64 நலன் பெறுனர்களுக்குரிய சில உரிமைப் பத்திரங்கள் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் |

| | | | |
|---|---|---|---|
| | | | சில உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் மேலும் ஒரு பகுதி வீடுகள் விற்கப்பட்டுள்ளன எனவும் பதிலாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | உரிமைப் பதிதிரத்தின் பட்டோலை II இன் பிரகாரம் “சுதந்திர உரிமைப் பத்திரம் ஒப்படைக்கின்ற மேற்கூறிய காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து பத்து ஆண்டுகள் செல்லும் வரை காணி உரிமையாளர்களின் பிள்ளைகள் அல்லது இரத்த உறவுடையவர்களுக்குப் புறம்பான நபர்களுக்கு உப குத்தகைக்கு வழங்குதல் அல்லது வேறு ஏதாவது வகையில் உரிமை மாற்றிக் கொடுத்தல் செய்ய முடியாததுடன் காணி குடியிருப்பிற்காகவே ஈடுபடுத்துதல் வேண்டும். மேலும், அக்காலப் பகுதி முடிவடைவதற்கு அண்மிக்கும் வரை குடியிருப்பதற்காக ஈடுபடுத்தபடாதிருந்தால் அத் திகதியிலிருந்து இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதுவித கடப்பாடுமின்றி திருப்பி ஒப்படைப்பப்படுகின்றது’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், இப்பிரிவினை மீறி உரிமைப் பத்திரம் வழங்குவதற்கு முன்னர் வீடுகளை ஏனையவர்களுக்கு மாற்றிக் கொடுத்த 164 சந்தர்ப்பங்கள் | வீடுகளை உரிமை மாற்றிக் கொடுத்தல் சம்பந்தமாக உரிமைப் பத்திரத்தின் பட்டோலை II இன் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திடமிருந்தும் சனாதிபதி செயலகத்திடமிருந்தும் ஆலோசனைகள் கேட்கப்பட்டுள்ளதனால் நீண்டகாலமாகத் தீர்த்து வைக்கப்படாத காணிச் சிக்கல்கள் தொடர்பாக நிறுவனத் தலைவர்களுடன் நடாத்திய கலந்துரையாடல்களுக்குரிய தகவல்களை வழங்குமாறு தென் மாகாண காணி ஆணையாளர் மேற்கொண்ட வேண்டுகோளின் பிரகாரம் இப்பிரிவின் சுனாமி வீடுகளின் உரிமைப் பத்திரத்தினைத் தயாரிக்கும் போது உருவாகியுள்ள சிக்கல்கள் தொடர்பாக 2020 சனவரி 27 ஆந் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டன. அது சம்பந்தமாக பிரதேச செயலகத்தினால் அந்த உரிமைப் பத்திரதாரர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படாமையைத் தவிர்த்து வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | உரிமை பத்திரதாரர்கள் மரணமடைந்த சந்தர்ப்பங்களில் பதிலாளர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படாதிருந்த 16 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | மரணமடைந்த நபர்களின் பதிலாளர்களின் பெயரில் அல்லது ஏனைய பொருத்தமான வகையில் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக விரைவாக நடவடிக்கையை முடிவுறுத்ததுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். | உரிமைப் பத்திரதாரர்கள் மரணமடைந்த 16 சந்தர்ப்பங்களுக்குரிய பகுதிகளை பதிலாளர்களின் பெயரில் உரிமைப் பத்திரங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சில உரிமைப் பத்திரங்களைத் தயாரிப்பதற்கு காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு உரிமைப் பத்திரம் சம்பந்தமாக குடும்பத்தில் இணக்கப்பாடு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (ஈ) | 5 சுனாமி வீடுகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் வசித்து வருகின்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதி வரை அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரியதரப்பினர்களிடமிருந்து விரைவாகத் தீர்வினைப் பெற்று அனுமதியற்றவர்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதில் அனுமதியற்றவர்கள் குடியிருப்பதானது சுனாமி நலன் பெறுநர்களால் ஏனைய தரப்பினருக்கு சட்டரீதியற்ற வகையில் வழங்கி அப்புறப்படுத்தப்பட்டுள்ள வீடுகள் எனவும் அனுமதியற்றவர்கள் சம்பந்தமாக மாவட்ட செயலாளர் மாகாண காணி ஆணையாளர், காணி ஆணையாளர் நாயகம் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆகியோருடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது எனவும் அதற்காக அரசாங்கத்தின் தலையீட்டுடன் கொள்கைத் தீர்மானத்தை வழங்குமாறு 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் பதிலாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | ஒரு நலன்பெறுநருக்கு 3598 மூ.பி.கா இலக்கத்தின் கீழ் வீட்டு இலக்கம் 250 மற்றும் 251 ஆகிய இரண்டு வீடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை இரண்டு வீடுகள் விற்கப்பட்டிருந்தன. | வீடுகளை அனுமதியற்றவர்களுக்கு வழங்குதல் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்வாறு அனுமதியற்றவர்களுக்கு வழங்கியுள்ள காணிகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்க கொள்கைத் தீர்மானம் வழங்குமாறு காணி ஆணையாளர் நாயகத்தினால் தெரிவித்து அனுப்பி வைக்கப்படடுள்ளது என கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டது. |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

### 4.1 இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரித்த பதவியணியினர்களில் 161 | நிரந்தர உத்தியோகத்தர்களை நியமித்து விரைவாக | வெற்றிடங்களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிக்கும் வரை முறைப்படியாக |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்டது. மாவட்ட செயலகத்தினால் அவ் வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் கடமை உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மற்றும் கடமைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | முறையான அங்கீகாரமின்றி அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கையை மிகைத்து 37 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் போது அங்கீகரித்த பதவியணியினர்களை மிகைக்காத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 37 மேலதிக உத்தியோகத்தர்களில் 21 உத்தியோகத்தர்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனவும் எங்களால் இந்த உத்தியோகத்தர்கள் எவர்களிலும் மிகைகள் ஏற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பிரச்சினை மற்றும் கஸ்டத்தின் பேரில் மேற்கொண்ட பல்வேறு மேன்முறையீடுகளின் பிரகாரம் நியமன அதிகாரியினால் காலி மாவட்டத்திலுள்ள அலுவலகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டன. எனவும் இம் மிகை தொடர்பாக பல தடவைகள் நியமன அதிகாரிக்குத் தெரியப்படுத்தி கடிதம் அனுப்பபட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மாவட்ட செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 13 சாரதிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ஓடும் நிலையில் காணப்பட்ட | அங்கீகரித்த பதவியணியினர்களை மிகைத்து ஆட்சேர்க்கப்படாதிருத்தல் வேண்டும். | சாரதிகளின் இடமாற்ற மேன்முறையீடு சம்பந்தமாக அமைச்சினால் எடுத்த தீர்மானம் இதுவரை அமுல்ப்படுத்தப்படாமையின் |

குழாம் மற்றும் இணைத்துக் கொள்ளப்பட்ட 8 வாகனங்கள் மாத்திரம் காணப்பட்டன. அதற்கிணங்க ஐந்து சாரதிகளின் மிகைகள் காணப்பட்டதுடன் அச் சாரதிகளுக்கு மாவட்ட செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 2019 திசெம்பர் மாதம் வரை ரூபா 1,519,709 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அப்பணம் சிக்கனமற்ற செலவு என்று அவதானிக்கபபட்டதுடன் ஐந்து சாரதிகள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தனர்.

காரணமாக சாரதிகளின் மிகை 05 ஆக இருந்தது எனவும் பின்னர் பிரதேச செயலகத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தின் பிரகாரம் நான்கு சாரதிகள் அந்த அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் தற்பொழுது காணப்படுவது ஒரு சாரதியின் மிகை மாத்திரம் எனவும் தெரிவிக்கப்பட்டது.